தீணறடிக்குது கொரோனோ வைரஸ்



வல்லரசு நாடாக இருந்தாலும், நோய் என்று வந்துவிட்டால், பதறியோடாத்தான் செய்யும். அதிலும், சிகிச்சையே இல்லாத ஒரு வைரஸ் தொற்று என்றால் இன்னும் பேராபத்து தான். இப்படித்தான், உலகின் '2வது பெரிய பொருளாதார வல்லரசு' என்று மார்தட்டிக் கொள்ளும் சீனாவும், கொரோனா என்ற வைரஸ் தொற்று பரவுவதால் திணறிக் கொண்டிருக்கிறது. காற்றில் பரவும் இந்த வைரஸ் எளிதில் தொற்றிக் கொள்ளும் தன்மை உள்ளதால், உலகின் பெரும் வர்த்தக நகரங்களில் ஒன்றும், சீனாவின் தலைநகராகவும் உள்ள பீஜிங் திணறிக் கொண்டிருக்கிறது.

இதுவரை 5க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாகவும், 300க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு, மருத்துவக் கண்காணிப்பில் உள்ளதாகவும் சீனா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. சீனாவில் இருந்து ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளுக்கும் இந்த வைரஸ் மெல்ல மெல்ல பரவிக் கொண்டிருக்கிறது. சீனாவின் அண்டை நாடான நமக்கும் இந்த ஆபத்து உள்ளதால், ''சீனாவுக்கு செல்லும் பயணிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

சீனாவில் இருந்து இந்தியாவுக்குள் வரும் பயணிகளுக்கு முழு பரிசோதனை நடத்தி, அவர்களது விபரங்களை சேகரித்துக் கொண்ட பின்னரே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதில், சளி, காய்ச்சல், தலைவலி என்ற அறிகுறி இருந்தால், உடனடி மருத்துவப் பரிசோதனைதான். திருப்தி இருந்தால் மட்டுமே வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இல்லாவிட்டால் மருத்துவப் பரிசோதனைதான்.

கொரோனோ வைரஸ் அப்படி என்னதான் சிக்கலை ஏற்படுத்தி விடப்போகிறது? என்று டாக்டர்களிடம் கேட்டோம். டாக்டர் அழகர் வெங்கடேசன் கொடுத்த தகவல்கள் இவை...

''கொரோனோ வைரஸ் பாதிப்புக்கு உலகம் பதறிக் கொண்டிருப்பதற்கு முக்கியக் காரணம், இதற்கு இதுவரை உரிய சிகிச்சைக் கண்டுபிடிக்காததுதான். உலகில் மருந்துகள் கண்டுபிடிக்கப் படாத எத்தனையோ வைரஸ் பாதிப்புகளில், கொரோனா வைரசும் ஒன்று. அதனால்தான் உலகம் முழுவதும் திணறிக் கொண்டிருக்கின்றனர். இதில் ஆல்பா கொரோனோ வைரஸில் 2 ரகங்களும், பீட்டா கொரோனோ வைரஸில் 2 வைரஸ்களும், நோவெல் கொரோனா வைரஸ் உட்பட பல ரகங்களும் உள்ளன.

மிருகங்களில் இருந்து மனிதர்களுக்கு பரவி, பின்னர் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு இந்த வைரஸ் பரவிக் கொண்டிருக்கிறது. இந்த வைரஸ்களில் எந்த ஒரு ரகத்துக்கும் சிகிச்சை முறை இல்லை என்பதுதான் இதன் பின்னடைவுக்கும், நோய் குறித்த அச்சத்துக்கும் காரணமாகும். இதில், சீனாவில் இருந்து மற்ற நாடுகளுக்குப் பரவிக் கொண்டிருப்பது நோவல் கொரோனோ வைரஸ் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனோ வைரஸ் தொற்றினால், முதலில் சாதாரணமாகத்தான் இருக்கும். அதாவது நம் நாட்டில் சீன நேரங்களில் ஏற்படும் வைரஸ் காய்ச்சல் போன்றுதான் அறிகுறிகள் தென்படும். இதில் சளி பிடித்தல், மூக்கில் நீர் ஒழுகுதல், இருமல், காய்ச்சல் என்று வரிசையாக படையெடுக்கும். கடும் உடல் அசதி தென்படும். காய்ச்சல் 3 நாட்களில் குறையாவிட்டால், 4ம் நாளில் ரத்தப் பரிசோதனை செய்யவேண்டும்.

ரத்தத்தில் சீரம் பரிசோதனையில் கொரோனோ வைரஸ் இருப்பது தெரியவந்தால், உடனடியாக வைரஸ் பாதிக்கப்பட்ட நபர் தனிமையறையில் வைக்கப்பட வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் டாக்டர் அறிவுரைப்படி ஓய்வும், காய்ச்சல் குறைப்புக்கான மருந்துகள் வழங்கப்பட வேண்டும். இதற்காக தனிமை வார்டுகள் ஏற்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட நபர்கள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்படுவார்கள். ஓய்வு... ஓய்வு...ஓய்வு... சிகிச்சையுடன் கூடிய ஓய்வு மட்டுமே இதற்கு நிரந்தத் தீர்வாகும்.

வைரஸ் பாதிக்கப்பட்ட நபரிடம் இருந்து காற்றின் மூலமும், தொடுதல் மூலமும் இந்த வைரஸ் மற்றவர்களுக்குப் பரவும். தொடுதல், வைரஸ் பாதித்த நபர் பயன்படுத்திய உடைகளை பயன்படுத்துவது, தும்மல், இருமல், சம்பந்தப்பட்ட நபருடன் கைகுலுக்குவது உட்பட பல விதங்களில் இது பரவும் என்பதால், அதிகப்படியாக கையை சோப்புப் போட்டுக் கழுவுவது நிறந்தது. வைரஸ் பாதித்த நபர் பயன்படுத்திய உடைகளை கொதிக்க வைத்த நீரில் சுத்தம் செய்வது சிறப்பு.

நாம்தான் ஒய்வில் இருக்கிறோம், போதிய சிகிச்சையில் உள்ளோம் என்ற அசட்டையில் இருக்கக் கூடாது. காரணம், மற்ற வைரஸ்களைப் போல் அல்லாமல், கொரோனோ வைரஸ் சுவாசப் பிரச்னையை ஏற்படுத்தும். ஆமாங்க, ரத்தத்தில் மெல்லப் பரவும் இந்த வைரஸ் நுரையீரலை ஆக்கிரமித்து சுவாசப் பிரச்னையை ஏற்படுத்தும். இதை சரியான நேரத்தில் கண்டுபிடித்துவிட்டால் 90 சதவீதம் குணப்படுத்திவிட முடியும்.

அசட்டையாக இருந்தால், உரிய சிகிச்சையை மேற்கொள்ளாமல் ஒய்வு எடுக்காமல் இருந்தால், இது நுரையீரல் செயல்பாட்டை ஒட்டு மொத்தாக பாதிக்கச் செய்து மரணத்தை விளைவிக்கும். அதாவது, அசட்டையாக இருப்பது உயிராபத்தை ஏற்படுத்திவிடும் என்பதால்தான் சீனா இப்போது பதறிக் கொண்டிருப்பது. இதற்கு காலநிலை சூழலும் ஒரு காரணம். சீனாவில் இப்போது கடுமையான குளிர் காலம் நிலவுவதால், இந்த வைரஸ் கொஞ்சம் வேகமாக பரவுகிறது. நமதுநாட்டில் இப்போது வெயில் காலம் தொடங்கியுள்ளது. இதனால், ஆபத்து அதிகம் இல்லை என்றாலும், முன்னெச்சரிக்கையாக இருப்பது சிறந்தது' இவ்வாறு அவர் கூறினார்.

✍ அ. மகேந்திரன்.

என் தந்தை இன்னும் தையல் தொழிலாளியாகவே இருக்கிறார்!

✍ வி. ராமசுந்தரம்

தொடக்க ஆட்டக்காரர் முகமது யூசுப் வருத்தம்

பாகிஸ்தான் அணியின், நட்சத்திரக் கிரிக்கெட் வீரரான முகமது யூசுப் ஒரு சிறந்த தொடக்க ஆட்டக்காரர். வலதுகை பேட்ஸ்மேன். எவ்விதமான ஃபார்மட்களிலும் விளையாடக்கூடிய திறமைசாலி. பல முறை பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பை அள்ளிக் கொடுத்தவர்.

பிறப்பால் ஒரு கிறித்துவரான இவர், இஸ்லாமிய மதத்திற்கு மாறி, தன் பெயருக்கு முன் 'முகமது' என்று சேர்த்து கொண்டார். பாகிஸ்தான் அணியில் இதுபோல 4 கிரிக்கெட் வீரர்கள் மற்ற மதத்திலிருந்து, இஸ்லாமிய மதத்திற்கு மாறியுள்ளனர்.

இவரது தந்தை சாதாரண ஒரு தையல்காரர். மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே வறுமையில் வாடிய இவர், தனது பெற்றோரை ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வர வேண்டும் என்று உறுதியூண்டு, அதனை செயல்படுத்திய திறமைசாலி.

கல்லூரியில் விளையாடும்போதே இவருடைய திறமை வெளிப்பட்டது. அதனால் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்பட்டார். ஆனால் அணிக்காக விளையாட, சரியான நேரம் அமையவில்லை. அதனால்தான் இவர் இஸ்லாமிய மதத்திற்கு மாறினார். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இஸ்லாம் மதத்தினருக்கே வாய்ப்பு அளித்து வந்ததாக சில வீரர்கள் கூறியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

முகமது யூசுப், 90 டெஸ்ட் போட்டியில் விளையாடி, அதிகபட்சமாக 223 ரன்களையும், சராசரியாக 53 ரன்களையும் எடுத்தவர். 287 ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய இவர் 15 முறை சதமும், 64 முறை அரை சதமும் எடுத்திருக்கிறார். சர்வதேச போட்டிகளையும் இவர் விட்டு வைக்கவில்லை. 134 போட்டிகளையும் ஒரு கை பார்த்தவர் முகமது யூசுப். பாகிஸ்தான் அணிக்காக இருபத்தி நான்கு முறை சதத்தையும், மும்பத்தி மூன்று முறை அரை சதத்தையும் எடுத்துள்ளார். பாகிஸ்தான் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கும், ஒரு நாள் போட்டிகளுக்கும் கேப்டனாகவும் இருந்திருக்கிறார்.

இவரை சந்தித்த இரு தருணங்களில் முதல் முறை முகத்தில் தாடி இல்லாமல், சிறு குழந்தையின் புன் முறுவலுடன் காணப்பட்டார். மறு முறை சந்திப்பில், தாடியுடன் ஒரு மதபோதகரின் சாயல் அவரிடம் இருந்தது. அவர் பேச ஆரம்பிக்கும்போது ''அல்லா'' வின் நாமத்தை உச்சரித்த பிறகே பேச்சை தொடர்ந்தார். சிறுவயதில் தான் வறுமையை எதிர்நீச்சல் போட்டு கடந்து வந்ததை என்னிடம் பகிர்ந்து கொண்டார். தன் பெற்றோரையும், குடும்பத்தையும் வறுமையிலிருந்து மீட்டு, நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தது குறித்து அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஆனாலும், என் தந்தை அதே பழைய இடத்தில் அதே தையல்தொழிலாளியாகவே பணியாற்றி வருகிறார். இன்னமும் அதை அவரால் மறக்க முடியவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

மற்றொரு முறை சந்திப்பின் போது, முகத்தில் தாடியுடன் ஒரு மதபோதகரின் சாயலில் இருந்தார். எங்களின் முதல் சந்திப்பின் மலரும் நினைவுகளை பகிர்ந்தோம். ''முகத்தில் தாடி இல்லாமல் இருந்தால்தான் நீங்கள் ஸ்மார்ட்டாக இருக்கிறீர்கள்'' என்றதற்கு, நான் ஒரு மத சொற்பொழிவாளர். கிரிக்கெட் எனது புரொஃபஷன், மதம் எனது உயிர்மூச்சு. ஆகையால், நான் மதப்பாடமுகத்தில் தாடியுடன் தான் இருக்க வேண்டும்'' என்று கூறினார். நான்தோறும் முறைப்படி தொழுகைகளை மேற்கொள்ளும் இவர் இப்போது இஸ்லாமிய மதத்தின் போதகர்.

முகமது யூசுப்புடன்...

மேற்கிந்திய நட்சத்திரக் கிரிக்கெட் வீரரான பிரைன் லாரா, ''முகமது யூசுப் வருங்கால கிரிக்கெட் தலைமுறைக்கு ரோல்மாடல்'' என்று புகழ்ந்து பேசி இருக்கிறார். 2010ம் ஆண்டில் ஒய்வு பெற்றவுடன் முழு நேர மதபோதனையாளராகவே மாறினார். இவரின் பேட்டிங் ஸ்டைலையும், க்ளோஸ் இன் ஃபீல்டிங்கும் மிகவும் அற்புதமானவை. பாகிஸ்தான் வீரர்களில் அதிகமாக ரன் அவுட்டுகளை ஏற்படுத்தியவர் என்ற பெருமையும் புகழும் இவருக்கு உண்டு.

✍ சந்திப்பு: ஆர்.ஆனந்த்.

கிரிக்கெட் ஜாம்பவான்களின் இன்னொரு முகம்

'தொழில்நுட்ப இலக்கியம்' இலக்கியத்துறையினரால் ஒதுக்கப்படுகிறதா?

✍ காம்கேர் கே. புவனேஸ்வரி

சமீபத்தில் நான் எழுதியிருந்த ஒரு பேஸ்புக் பதிவில் தொழில்நுட்ப இலக்கியம் குறித்த போதுமான தெளிவு இலக்கியத்துறையினருக்கு இல்லாததால் தொழில்நுட்ப இலக்கியத்தின் மேல் கவனம் விழவில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பதிவின் பின்னூட்டத்தில் ''தொழில்நுட்ப இலக்கியம் என்றால் என்ன?'' என்று நிறைய பேர் கேட்டிருந்தனர்.

அதற்குமுன் இலக்கியம் என்றால் என்ன? என்பதை தெரிந்துகொள்வோம்.

புனைவாகவோ, அபுனைவாகவோ எழுதப்படும் எழுத்துக்கள் இலக்கியம் என்ற பிரிவின்கீழ் வரும். ஆங்கிலத்தில் Literature என்பார். கற்பனையில் எழுதப்படுவது புனைவு. உண்மை சம்பவங்கள் நிகழ்வுகளை எழுதுவது அபுனைவு.

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கு என்றால் நோக்கம், கொள்கை, லட்சியம். இயம் என்றால் இயம்புவது, சொல்வது, வெளிப்படுத்துவது.

நாம் அறிந்த கருத்துக்களையும் நமக்குத் தெரிந்த உண்மைகளையும் ஒரு சம்பவம் அல்லது நிகழ்வு குறித்து நாம் உணர்ந்த உணர்வுகளையும் நம் எண்ண ஓட்டங்களையும் பிறருக்கு புரியும்படி எடுத்துக் கூற உதவுகின்ற ஒரு கருவி மொழி. அந்த மொழியைப் பேசுகின்ற ஒரு கருவி மொழி. அந்த மொழியைப் பேசுகின்ற மக்களின் கொள்கைகளையும் அவர்களது குறிக்கோள்களையும் எடுத்துச் சொல்வது இலக்கியம்.

வெவ்வேறு காலகட்டத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தின் கட்டமைப்புகளையும் எடுத்து இயம்புவதால் இலக்கியம் காலத்தின் / சமுதாயத்தின் கண்ணாடியாகிறது.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு போன்றவை சங்ககால மக்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் பிரதிபலித்ததால் அவை சங்ககால இலக்கியங்கள் எனப்பட்டன. அதை அடுத்த சங்கமருவியகாலத்து திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை போன்றவை அறம் சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்ததால் அவை 'அறஇலக்கியங்கள்' எனப்பட்டன. அடுத்து வந்த பல்லவர் காலம் பக்தி சார்ந்த விஷயங்கள் அதிகம் பேசப்பட்டதால் 'பக்தி இலக்கியங்கள்' தோன்றின.

இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த காலத்தில் வாழ்ந்த மக்களையும் அவர்களது இயல்புகளையும் அவர்கள் வாழுகின்ற சமுதாயத்தையும் படம்பிடித்து காட்டுபவை இலக்கியம்.

அந்த வகையில் தொழில்நுட்பம் நம்நாட்டில் அறிமுகமானபிறகு தொழில்நுட்பம் குறித்தும், அதைப் பயன்படுத்தும் மக்களின் மனோபாவம் குறித்தும், அவர்கள் வாழுகின்ற சமுதாயம் குறித்தும் உருவாக்கப்படும் எழுத்துக்களும் படைப்புகளும் தொழில்நுட்ப இலக்கியத்துக்குள் வரும்.

தொழில் நுட்பத்தையும் இலக்கியத்தையும் இணைத்து நான் புராஜெக்ட்டுகள் தயாரிக்கத் தொடங்கியபோது அதில் இரண்டு முக்கிய அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாயிற்று.



ஒன்று என்ன புராஜெக்ட் செய்கிறோமோ அது சார்ந்த விஷயங்களை தெரிந்து கொள்ளுதல். மற்றொன்று எந்த கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தில் புராஜெக்ட்டுகளை செய்ய இருக்கிறோமோ அந்தத்தொழில் நுட்பத்தை அறிந்துகொள்ளுதல்.

உதாரணத்துக்கு, கந்தர் சஷ்டி கவசத்தை அனிமேஷனில் உருவாக்கியபோது, குழந்தைகளுக்கும் புரியும்படி அதற்கான விளக்கத்தை எழுதுவதற்காக அதன் பொருளை முழுமையான ஆதாரத்துடன் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று. அத்துடன் அதை எந்த சாப்ட்வேரில் தயாரித்தால் சிறப்பான படைப்பாக உருவாக்க முடியும் என்றறிந்து அதில் வடிவமைக்கும் நுட்பத்தை கற்க வேண்டியதாக இருந்தது.

அதுபோல திருவாசகத்திலுள்ள 51 பதிகங்களையும் 658 பாடல்களையும்பாடி, அதன் பாடல் வரிகளையும் பதிக விளக்கத்தையும் இணைத்து பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள்கூட சுலபமாக கையாளக்கூடிய வகையில் சிறப்பான மல்டி மீடியா படைப்பாக உருவாக்கினோம். அப்போது திருவாசகம் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டியிருந்ததுடன், மல்டி மீடியா படைப்பாக கொண்டுவருவதற்கான தொழில்நுட்பம் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியதாயிற்று.

வங்கிகளுக்கு சாப்ட்வேர் உருவாக்கும்போது அக்கவுன்ட்டிங் குறித்த ஆழ்ந்த அறிவும் வேண்டும், அந்த சாப்ட்வேரை எந்த தொழில்நுட்பத்தில் உருவாக்க இருக்கிறோமோ அதையும் கற்றறிந்திருந்து அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஜாதகம், மருத்துவம், கல்வி இப்படி எந்தத் துறைக்கு சாப்ட்வேர் வடிவமைக்க வேண்டுமானலும் அந்தந்த துறை அறிவும், தொழில்நுட்பம் சார்ந்த அனுபவமும் இருந்தால் மட்டுமே சிறப்பாக செயல்பட முடியும்.

அதுபோல நான் அறிந்துகொள்ளும் தொழில் நுட்பங்களை நான் ஆய்வு செய்து கண்டுபிடிக்கும் சாப்ட்வேர்களை அனுபவத்தில் கற்று உணர்வதற்கை அந்தந்த காலகட்டத்திலேயே புத்தகமாக நேரடி தமிழில் (மொழிபெயர்ப்பு அல்ல) எழுதி வந்ததால் இதுவரை 125 புத்தகங்களை எழுத முடிந்தது.

தமிழில் மட்டுமல்ல ஆங்கிலம், கன்னடம் போன்ற மொழிகளிலும் இவை வெளியாகியுள்ளன. இதுதான் தொழில்நுட்ப இலக்கியம். இலக்கியம் உட்பட்ட பிறதுறைகளுடன் தொழில்நுட்பத்தின் வசதிகளை இணைத்து அந்தத் துறையின் சிறப்புகளை பரவலாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதே தொழில்நுட்ப இலக்கியம்.

தொழில்நுட்ப இலக்கியம் என்பது வெறும் தொழில்நுட்பம் சார்ந்த 'எழுத்து' மட்டுமல்ல. ஆடியோ, வீடியோ அனிமேஷன் இன்னபிற விஷயங்களையும் உள்ளடக்கிய அரிய பொக்கிஷம்.

தொழில்நுட்ப இலக்கியம் வளர்ந்தால் மட்டுமே பிற இலக்கியங்களை மக்களுக்குப் புரியும் வண்ணம் வெப்சீரியலாகவோ, நிறைப்படமாகவோ, முழுமையான அனிமேஷன் படைப்பாகவோ கொண்டு வர முடியும். இன்றைய தலைமுறையினருக்கு இலக்கியங்களை சுவாரசியமான வடிவில் புரியும்படி எடுத்துச் சொல்வதற்கு தொழில்நுட்ப இலக்கியத்தால் மட்டுமே முடியும்.

தொழில்நுட்ப இலக்கியத்துறையில் இயங்கவும் சாதிக்கவும் நிறைய உழைப்பும் ஆழ்ந்த அறிவும் தேவை. இத்தகைய சிறப்பு வாய்ந்த தொழில்நுட்ப இலக்கியம் இலக்கியத் துறையினரால் கண்டுகொள்ளப்படாமல் இருப்பது ஆச்சரியமளிக்கிறது.

Scanned by CamScanner